# <u>சாதாரணக்கூட்டம்</u>

**பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2020 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.**

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## <u>பொருள் : 01</u>

திருப்பூர் மாவட்ட உள்ளாட்சி அமைப்புகளில் "Jal Sakthi Abhiyan" மத்திய ஆய்வு குழுவினரின் நேரடி அறிவுரைகளில் தெரிவிக்கப்பட்டவாறு "Jal Sakthi Abhiyan" மற்றும் "SuWaSem" 2019–20 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ், 50 சதவிகிதம் அரசு மான்யம் மற்றும் 50 சதவிகிதம் நகராட்சிப் பங்குத் தொகையுடன் நீர் நிலைகளை மேம்படுத்தும் பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்கள் ந.க.எண் :1693/2019/பா நாள் : 07.07.2020 மற்றும் 29.07.2020 கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் வார்டு எண் :01ல் மேற்கு கல்லம்பாளையம் ஓடையை (SF No :204) தூர் வாரி, Perculation Pond மற்றும் இறக்கை சுவர் (Wing Wall) அமைத்து நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ.22.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட திட்டத்திற்கான அரசு மான்யமாக 50 சதவிகிதம் ரூ.11.30 இலட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 29.07.2020 அன்று விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:725/2019/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.22.60 இலட்சத்தில் அரசு மான்யம் 50 சதவிகிதம் மற்றும் நகராட்சிப் பங்குத் தொகை 50 சதவிகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்கண்ட பணியினை 50 சதவிகிதம் ரூ.11.30 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 02</u>

பல்லடம் நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு (Street Vendors ) OR Generation Database Creation and Vending Certificate (Multicolor Washable Scheme free Certificate) OR Code உடன் தயாரித்து வழங்கிட வேண்டி 29.06.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியவர்களின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ மாங்காடு காமாட்சியம்மன் பிசினஸ் கார்ப்ரேசன், சென்னை | ரூ.165/- மற்றும் சேவைக்கட்டணம் (ஒரு நபருக்கு) |
| 2 | ATS மல்டி மீடியா, சென்னை. | ரூ.175/- (ஒரு நபருக்கு) |
| 3 | எலைட் பியூப்பில், அரும்பாக்கம், சென்னை | ரூ.178/- (ஒரு நபருக்கு) |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் உரிய விபரங்களுடன் சான்றிதழ் வழங்க ஒரு நபருக்கு ரூ.165/- (மற்றும் சேவை வரியுடன் சேர்த்து தயாரித்து) வழங்க குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.ஸ்ரீ மாங்காடு காமாட்சியம்மன் பிசினஸ் கார்ப்ரேசன், சென்னை அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று, மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு (114 நபர்களுக்கு) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை நகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>பொருள் : 03</u>

பொது சுகாதாரப்பிரிவிற்கு கோவிட் 19 ( கொரோனா) தொற்று நோய் பரவா வண்ணம் தடுக்கும் பொருட்டு Receipe Pharma, திருப்பூர் அவர்களிடம் Pulse oximeter 2 எண்ணிக்கை வாங்குவதற்கான செலவினத் தொகை ரூ.6000 /- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.
**( ந.க.எண் 330/2020/எச்1)**

## <u>பொருள் : 04</u>

மாதப்பூர் உரக்கிடங்கில் உள்ள துருப்பிடித்து பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள 76 எண்ணிகையிலான டம்பர் பின்களை அப்புறப்படுத்த 03.08.2020ல் பொது ஏலம் நடைபெற்றது. இந்த பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் ஏலம் கோரிய விபரம் கீழ்க்கண்டவாறு : (ந.க.எண் 468/2020/இ1)

| வ. எண் | ஏலத்தாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரிய அதிகபட்ச ஏலத் தொகை |
|---|---|---|
| 1 | திருமதி.V.கோமதி,<br>17/3, திருவள்ளுவர் வீதி,<br>பல்லடம். | ரூ.1,12,000/– |
| 2 | திருவாளர்கள்.பவர் அன்ட் கோ,<br>7/11, மாகாளியம்மன் கோவில் தெரு,<br>பச்சாபாளையம், பல்லடம். | ரூ.1,11,000/– |

மேற்கண்ட இரண்டு ஏலத்தாரர்களில் அதிகப்படியான ரூ.1,12,000/–க்கு ஏலம் கோரப்பட்ட திருமதி.V.கோமதி, 17/3, திருவள்ளுவர் வீதி, பல்லடம் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களால் 05.08.2020 ஆம் தேதி முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்கண்ட துருப்பிடித்து பழுதடைந்த இரும்பு பின்களை அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>
1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 05

வார்டு எண் :18 குமரன் வீதியில் கிழக்குப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு மூன்று சந்திப்பு சாலையின் முனையில் தண்ணீர் தேங்கி வழிந்தோடுவதால், அதனை சீராக்கும் வகையில் ஏற்கனவே உள்ள வடிகாலுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட வடிகாலுக்கு இடையே போக்குவரத்திற்கு ஏதுவாகவும், கழிவுநீர் தேங்காமல் வழிந்தோடவும் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:429/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 06

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் பணிக்கு 07.08.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 19/2020/இ1)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி வார்டு எண் :01 முதல் 18 வரை உள்ள அனைத்து வீடுகள், கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு கட்டிடங்களில் பெயிண்ட் கொண்டு வட்ட வடிவம் வரைந்து புதிய மற்றும் பழைய கதவு எண் எழுதுதல் | 10.00 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.00 % குறைவு |
| | | | திருவாளர்கள்.D.R. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், ஒட்டன்சத்திரம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.00% அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 07

வார்டு எண் :06 பச்சாபாளையம் அரிசன காலனி பகுதியில் பழுதடைந்துள்ள கான்கிரீட் சாலைகளை பழுது பார்க்கவும், மந்திரி கவுண்டர் வீதியில் சிறுபாலம் பழுது ஏற்பட்டுள்ளதால், அதனை அகற்றி புதியதாக சிறுபாலம் அமைக்கவும் மற்றும் அரிசன காலனி பகுதியில் ஏற்கனவே உள்ள கழிவுநீர் கால்வாய் பழுது ஏற்பட்டுள்ளதால், அதனை பழுது பார்த்து சரி செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:911/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 08

2020- 2021 ஆம் ஆண்டிற்கு பல்லடம் நகராட்சியில் பொதுப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவிற்கு எழுதுபொருட்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகளை கூட்டுறவு சங்க நிறுவனத்திடம் வாங்க ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத் தீர்மானம் எண் : 51 நாள் : 21.03.2020 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2020 – 2021 ஆம் ஆண்டிற்கு எழுதுபொருட்கள் மற்றும் பதிவேடுகளை வாங்கியமைக்கான கூடுதல் செலவினத்தொகை ரூ. 5,00,000 /- ஐ கூட்டுறவு சங்க நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி பட்டியலுக்கான தொகையினை ஈரோடு மாவட்ட பெண்கள் தொழிற்கூட்டுறவு அச்சுக்கூட்டுறவு நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கலாம்.

( ந.க.எண் : 217/2020/ஆர்சி)

## பொருள் : 09

நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு (250 லிட்டர்/மணி) இயந்திரத்தில் உள்ள மோட்டார், Carbon filter, Sand Medias, Membrance filter மற்றும் பைப் லைன் முழுவதும் பழுதடைந்துள்ளதால், சுத்திகரிக்கப்பட்டு வெளிவரும் தண்ணீர் குடிப்பதற்கு ஏதுவாக இல்லை. எனவே, மேற்கண்ட பொருட்கள் புதிதாக சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.43,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந.க.எண்:429/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 10

பல்லடம் நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019–20 சிப்பம்–I ன் கீழ் வார்டு எண்:01 மேற்கு கல்லம்பாளையம் மயானம் சாலை, போயர் வீதி, வார்டு எண்:03 தெற்குபாளையம் அரிசன காலனி, தெற்குபாளையம் பிரதான சாலை, சிவசக்தி நகர், வார்டு எண்:04 டி.எம்.டி நகர், வார்டு எண்: 13 ராம் நகர், வார்டு எண்: 14 சி.டி.சி. காலனி, பாலாஜி நகர், துரைசாமி நகர், வார்டு எண்: 16 ஜி.ஆர்.ஆர். மண்டபம் வீதி, ஜே.கே.ஜே காலனி, குமார் தோட்டம், வார்டு எண்: 18 பாரதிபுரம் மற்றும் பிடிஓ காலனி ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார் சாலைகளை பேவர் மிசின் கொண்டு புதுப்பிக்கும் பணிக்கு ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில், 18.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழிற்நுட்ப உறை திறக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. இதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளிலும் தொழிற்நுட்ப தகுதி பெற்றிருந்ததால், 21.08.2020 அன்று விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:486/2020/இ1)

| | |
|---|---|
| 1.திரு.V.கருப்பசாமி, ஒப்பத்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.93% அதிகம் (ரூ.207,24,187) |
| 2.திருவாளர்கள். உமையாள் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 8.06% அதிகம்(ரூ.213,43,491) |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.V.கருப்பசாமி,ஒப்பந்ததாரர் அவர்களிடம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளுமாறு 21.08.2020 ஆம் நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி ஒப்பந்ததாரர் ஆட்கள் கூலி, தார் விலை, இதர மூலப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் வரிசை எண்: 8ல் உள்ள வகை ரூ.7405/–க்கு பதிலாக ரூ.7401/–க்கு பணி மேற்கொள்ள சம்மதம் என தனது கடிதத்தின் வாயிலாக 24.08.2020 அன்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட பணிக்கு திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் 4.93% (ரூ.207,24,187) மதிப்பீட்டை விட கூடுதலாக அளித்துள்ளதால், ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், 4.90% (ரூ.207,18,295) மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளது. மேலும், மேற்கண்ட பணியானது 'திட்டப் பணி' என்பதால், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என கருத்தில் கொண்டு மதிப்பீட்டை விட கூடுதலாக 4.90% (ரூ.207,18,295) க்கு மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

4.மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மற்றும் திருத்திய வரவு, செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 11</u>

பல்லடம் நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019–20 சிப்பம்–II ன் கீழ் வார்டு எண்:11 ல் உள்ள எஸ்.என்.ஆர் கார்டன் மற்றும் கே.ஆர்.வி. கார்டன் ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார் சாலைகளை பேவர் மிசின் கொண்டு புதுப்பித்து மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் பணிக்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில், 18.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழிற்நுட்ப உறை திறக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. இதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளிலும் தொழிற்நுட்ப தகுதி பெற்றிருந்ததால், 21.08.2020 அன்று விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:486/2020/இ1)

| | |
|---|---|
| 1.திரு.A.மதுரைவீரன்,<br>ஒப்பத்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.75% அதிகம் (ரூ.105,36,109) |
| 2.திருவாளர்கள். மதுரா இன்ஞ்னியரிங், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.93% அதிகம்(ரூ.102,60,477) |

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்கள். மதுரா இன்ஞ்னியரிங், ஒப்பந்ததாரர் அவர்களிடம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளுமாறு 21.08.2020 ஆம் நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்படி ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் இனம் எண்: 16ல் உள்ளதிற்கு ரூ.17500/–க்கு பதிலாக ரூ.17000/–க்கு பணி மேற்கொள்ள சம்மதம் என தனது கடிதத்தின் வாயிலாக 24.08.2020 அன்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட பணிக்கு திருவாளர்கள். மதுரா இன்ஞ்னியரிங், ஒப்பந்ததாரர் 4.93% (ரூ.102,60,477) மதிப்பீட்டை விட கூடுதலாக அளித்துள்ளதால், ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், 4.91% (ரூ.102,58,237) மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளது. மேலும், மேற்கண்ட பணியானது 'திட்டப் பணி' என்பதால், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என கருத்தில் கொண்டு மதிப்பீட்டை விட கூடுதலாக 4.91% (ரூ.102,58,237) க்கு மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

4.மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மற்றும் திருத்திய வரவு, செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் 12

பல்லடம் நகராட்சியில் 2019- 2020 ஆம் ஆண்டிற்கான வரவு மற்றும் செலவினக் கணக்குகள் மற்றும் அதற்குரிய அட்டவனைகளை திரு.ஏ.வி.ஸ்ரீதர், கூட்டப்பள்ளி காலனி, திருச்செங்கோடு அவர்களால் தயார் செய்தமைக்கான தொகை ரூ.50,000/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்: 753/2020/சி1)

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

## பொருள் 13

பல்லடம் நகராட்சியில் உள்ள ஜெராக்ஸ் நகல் எடுக்கும் இயந்திரத்தில் பழுதடைந்துள்ள பவர் சப்ளை யுனிட்டை மாற்றியமைத்தமைக்கான தொகை ரூ.10,500/- ஐ சபரி ஆட்டோமேஷன், திருப்பூர் அவர்கள் வழங்குமாறு கேட்டுள்ளார். மேற்கண்ட தொகை ரூ.10,500/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்: 338/2020/ஆர்சி)

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

## பொருள் 14

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள தேவையான அளவு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் இருப்பில் உள்ளதை உறுதிபடுத்தவும், போதிய அளவு இருப்பு இல்லாத பட்சத்தில் உடனடியாக இருப்பு வைத்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பல்லடம் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர், லைசால், சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல், பினாயில் போன்ற கிருமிநாசினிகள் குறைந்த அளவே இருப்பில் உள்ளது. அரசு கடித எண் 74JS(MA1) நிதித்துறை (சம்பளம்)/2020 நாள் : 01.04.2020 ன்படி, மேற்கண்ட கிருமிநாசினி மற்றும் பொருட்கள் வாங்க ஒப்பந்தம் கோருவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே அரசின் வழிகாட்டுதலின்படி, பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மற்றும் பொது சுகாதார பணிகளுக்காக கீழ்கண்டவற்றை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.11,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. நீர்த்த சுண்ணாம்புத்தூள் - 10000 கிலோ.
2. பிளீச்சிங் பவுடர் - 5000 கிலோ.
3. லைசால் - 1000 லிட்டர்.
4. சோடியம் ஹைப்போ குளோரைடு - 1000 லிட்டர்.
5. கருப்பு பினாயில் - 500 லிட்டர்.
6. களைக்கொல்லி மருந்து - 300 லிட்டர்.

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட கிருமி நாசினி மற்றும் பொருட்களை ஒப்படைப்பு பணியாக செய்யவும், இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

## பொருள் 15

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் கீழ்க்காணும் 7 பணிகளுக்கு 21.08.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் அண்ணா பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடத்தில் இரும்புக் கதவுகள், Water closet மற்றும் Manhole ஆகியவை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 | திரு.P.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |
| | | | திரு.P.திருமூர்த்தி, ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.73% அதிகம் |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலையின் மையத்தில் இரு முகப்பு கொண்ட 163 எண்ணிக்கையிலான 120 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகளை ஒரு வருடத்திற்கு ஆண்டு பராமரிப்பு (AMC) பணி | 7.80 | திருவாளர்கள். ஆர்.வி.ஜி. மெட்டல் இன்ட்ரஸ்டிரீ, ஒப்பந்ததாரர், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.57% குறைவு |
| | | | திருவாளர்கள். எஸ்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.71% அதிகம் |
| 3 | வார்டு எண் : 04 காமராஜ் நகர் பகுதியில் ஏற்கனவே Pipe Culvert டை எடுத்துவிட்டு, புதியதாக RCC Culvert அமைக்கும் பணி | 1.30 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |
| | | | திருவாளர்கள். டி.ஆர். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், ஒட்டச்சத்திரம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.51% அதிகம் |
| 4 | வார்டு எண் :04 மங்கலம் சாலையில் மார்க்கெட்டிங் சொசைட்டி எதிர்புறம் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணறு 7.50 HP மின்மோட்டாரில் உள்ள 4.00 Sqmm கேபிள் பழுது நீக்குதல் மற்றும் வார்டு எண்:02 சேடபாளையம் பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணற்றின் 5.00 HP மின்மோட்டார் பேனல் போர்டு மாற்றுதல் | 0.65 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.42% அதிகம் |
| | | | திரு.R.குமாரசாமி, ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| 5 | வார்டு எண் :05 காமராஜ் நகர் பகுதி மற்றும் வார்டு எண் :17 பாரதிபுரம் எம்.சி. மண்டபம் அருகிலுள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நரிபீடி சந்து வரை G.I. Pipe புதியதாக மாற்றி அமைத்தல் | 1.10 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |
| | | | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.95% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | வார்டு எண் :13 மேற்கு பல்லடம் நியூ எக்ஸ்டன்சன் வீதியில் மேல்நிலைத் தொட்டிக்கு வடபுறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கழிப்பிடம் பழைய மேற்கூரையை அப்புறப்படுத்தி புதிதாக மேற்கூரை அமைக்கவும், முகப்பு பகுதியில் உள்ள அறை மிகவும் பழுதடைந்துள்ளதை அப்புறப்படுத்தவும், வர்ணம் பூசுதல், கதவு, பைப் லைன், மின்சார வசதிகள் புதிதாக ஏற்படுத்துதல் மற்றும் புதியதாக சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் | 7.00 | திரு.R.இராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நெகமம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| | | | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.05% அதிகம் |
| 7 | வார்டு எண் :15 அண்ணாநகர் பகுதியில் உள்ள சமுதாயக் கழிப்பிடம் பகுதியிலிருந்து ஆணையாளர் குடியிருப்பு கேட் வரை சுற்றுச்சுவர் புதியதாக கட்டுவதற்கும், ஆணையாளர் குடியிருப்பு பகுதியில் வடிகால் இல்லாத காரணத்தினால், குடியிருப்பிலிருந்து வெளியேறும் கழிவுநீருக்கு புதியதாக 'Leach Pit' அமைப்பதற்கும் மற்றும் ஆணையாளர் குடியிருப்பு வளாகத்திற்கு சிறு சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 4.00 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.08% அதிகம் |
| | | | திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |

(ந.க.எண்: 431/2020/இ1)

மேற்காணும் 7 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் 16

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான மங்கலம் ரோட்டிற்கு இடதுபுறம் புதிதாக கட்டப்பட்ட கடை எண் 1 க்கு 21.08.2020 அன்று பொது ஏலம் நடத்தியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பொது ஏலம் கோரப்பட்டதில் குத்தகைதாரரால் அதிகபட்ச ஏலத்தொகை கோரப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்கண்டவாறு : -

| வ.எ | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | கடையின் விபரம் | அதிகபட்ச ஏலக்கேள்வி ஒரு மாதத்திற்கு |
|---|---|---|---|
| 1 | திருமதி.லட்சுமி க/பெ கனகசெல்வம் 1/196-5 , ராம் நகர், பொங்கலூர், பல்லடம் | மங்கலம் சாலை இடதுபுறத்தில் புதிதாக கட்டப்பட்ட கடை எண் 1 | 7000 |

மேற்கண்ட கடையை 01.09.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அதிகபட்ச ஏலக்கேள்வியாக கோரிய ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்ய தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

21.08.2020 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திருமதி.லட்சுமி க/பெ கனக செல்வம் என்பவரால் கோரப்பட்ட தொகை அரசு மதிப்பை விட கூடுதலாகவும், மற்ற ஏலக்கேள்வியை காட்டிலும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அதிகபட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரருக்கு

01.09.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கண்ட கடையை ஒப்படைப்பு செய்வதற்கு தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

## பொருள் 17

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான மங்கலம் ரோட்டிற்கு இடதுபுறம் புதிதாக கட்டப்பட்ட கடை எண் 2 க்கு 21.08.2020 அன்று பொது ஏலம் நடத்தியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பொது ஏலம் கோரப்பட்டதில் குத்தகைதாரரால் அதிகபட்ச ஏலத்தொகை கோரப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்கண்டவாறு : -

| வ.எ | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | கடையின் விபரம் | அதிகபட்ச ஏலக்கேள்வி ஒரு மாதத்திற்கு |
|---|---|---|---|
| 1 | திரு.ஏ.கனகசெல்வம் த/பெ அழகுமணி 1/196- 5, ராம் நகர், பொங்கலூர், பல்லடம். | மங்கலம் சாலை இடதுபுறத்தில் புதிதாக கட்டப்பட்ட கடை எண் 2 | 7000 |

மேற்கண்ட கடையை 01.09.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அதிகபட்ச ஏலக்கேள்வியாக கோரிய ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்ய தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

21.08.2020 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திரு. ஏ.கனக செல்வம் த/பெ அழகுமணி என்பவரால் கோரப்பட்ட தொகை அரசு மதிப்பை விட கூடுதலாகவும், மற்ற ஏலக்கேள்வியை காட்டிலும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அதிகபட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரருக்கு 01.09.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கண்ட கடையை ஒப்படைப்பு செய்வதற்கு தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

## பொருள் 18

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான மங்கலம் ரோட்டிற்கு இடதுபுறம் புதிதாக கட்டப்பட்ட கடை எண் 3 க்கு 21.08.2020 அன்று பொது ஏலம் நடத்தியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பொது ஏலம் கோரப்பட்டதில் குத்தகைதாரரால் அதிகபட்ச ஏலத்தொகை கோரப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்கண்டவாறு : -

| வ.எ | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | கடையின் விபரம் | அதிகபட்ச ஏலக்கேள்வி ஒரு மாதத்திற்கு |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.முருகேசன், த/பெ ராமசாமி, 224,கணபதி காலனி 6 வது தெரு, புனித தோமையார் மலை, காஞ்சிபுரம். | மங்கலம் சாலை இடதுபுறத்தில் புதிதாக கட்டப்பட்ட கடை எண் 3 | 7000 |

மேற்கண்ட கடையை 01.09.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அதிகபட்ச ஏலக்கேள்வியாக கோரிய ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்ய தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**21.08.2020** அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் திரு. ஆர்.முருகேசன் த/பெ ராமசாமி என்பவரால் கோரப்பட்ட தொகை அரசு மதிப்பை விட கூடுதலாகவும், மற்ற ஏலக்கேள்வியை காட்டிலும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அதிகபட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரருக்கு **01.09.2020** முதல் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கண்ட கடையை ஒப்படைப்பு செய்வதற்கு தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

## பொருள் : 19

பல்லடம் நகராட்சிக்குட்பட்டபகுதிகளில் கொரோனா தடுப்பு பணிக்கு பாதிக்கப்பட்ட (Containment Zone) பகுதிகளில், தடை செய்யப்பட்ட பகுதி என்ற அறிவிப்பு பலகையினை 3 x 2 என்ற அளவில் 10 எண்ணிக்கையிலான அறிவிப்பு பலகையினை தயார் செய்ய விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன :-

| | | |
|---|---|---|
| 1 | முருகன் பிரிண்டிங்,<br>மங்கலம் ரோடு, பல்லடம் | 4,350/- |
| 2 | மயில் ப்ளக்ஸ்<br>மங்கலம் ரோடு, பல்லடம் | 4,100/- |
| 3 | அட்சயா ப்ள்க்ஸ் பிரிண்டிங்,<br>102, நியூ எக்ஸ்டன்சன் வீதி,<br>மேற்கு பல்லடம்<br>பல்லடம், | 3,400/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் அட்சயா ப்ளக்ஸ் பிரிண்டிங், பல்லடம் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்கவும், அதற்கான தொகை ரூ.3,400 /- ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 921/2020/எச்1)

## பொருள் : 20

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் பொது இடங்களில் குப்பை கொட்டக்கூடாது என்ற 3 x 2 என்ற அளவில் 30 எண்ணிக்கையிலான அறிவிப்பு பலகையினை தயார் செய்ய விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன :-

| | | |
|---|---|---|
| 1 | முருகன் பிரிண்டிங்,<br>மங்கலம் ரோடு, பல்லடம் | 13,050/- |
| 2 | மயில் ப்ளக்ஸ்<br>மங்கலம் ரோடு, பல்லடம் | 12,300/- |
| 3 | அட்சயா ப்ள்க்ஸ் பிரிண்டிங்,<br>102, நியூ எக்ஸ்டன்சன் வீதி,<br>மேற்கு பல்லடம்<br>பல்லடம், | 10,200/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் அட்சயா ப்ளக்ஸ் பிரிண்டிங், பல்லடம் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்கவும், அதற்கான தொகை ரூ.10,200 /- ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.
(ந.க.எண் : 921/2020/எச்1)

## பொருள் : 21

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் உரக்கிடங்கில் கடந்த ஒரு வருடமாக பயன்படுத்தப்பட்டு வரும் Shredding Machine இயந்திரத்தில் உள்ள Bearing, Housing, grub screw, Allen belt, Spacer top plate, blade and circlip ஆகியவை தேய்ந்து பழுது ஏற்பட்டுள்ளதால், அதன் அரவைத் திறன் குறைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே இதனை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000 /– ஆகும். மேலும், மேற்கண்ட பொருட்கள் அவசர அவசியம் கருதி லிங்கா அக்ரி டிரேடிங் அன்ட் மெசினரி (பி) லிமிட், திருப்பூர் நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்வதற்கு விலைப்புள்ளி பெற்று, தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 881/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 22

பல்லடம் நகராட்சி அலுவலகத்திற்கு ஜுன் 2020 முதல் ஆகஸ்ட் 2020 வரை தினந்தோறும் தினசரி நாளிதழ்களை திரு.ஆர்.பிரபு, சீதேவி அம்மன் ஏஜென்சீஸ், பி.வடுகபாளையம், பல்லடம் அவர்கள் விநியோகம் செய்தமைக்கான தொகையை வழங்குமாறு கேட்டுள்ளார். தினசரி நாளிதழ்கள் பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு : -

1. தினத்தந்தி.
2. தினமலர்
3. இந்து.
4. தினகரன்.
5. தினமணி.

மேற்கண்ட தினசரி நாளிதழ்களுக்கு ஜுன் 2020ம் மாதத்திற்கான தொகை ரூ.1,070/ - ஜுலை 2020ம் மாதத்திற்கான தொகை ரூ.1,100/ - மற்றும் ஆகஸ்ட் 2020ம் மாதத்திற்கான தொகை ரூ.1,150/- ஆக மொத்தம் ரூ. 3,320/- ஐ திரு.ஆர்.பிரபு, சீதேவி அம்மன் ஏஜென்சீஸ், பி.வடுகபாளையம், பல்லடம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தனி அலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**